## சனாதிபதி அலுவலகம்
## சனாதிபதி நிதியம்

# க.பொ.த (உ/த) வகுப்பில் கல்வி கற்பதற்காக சனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில்களுக்காக விண்ணப்பங்கள் கோரல்

2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றி, அப்பரீட்சையில் சித்தியடைந்து, 2021 ஆம் ஆண்டில் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள, பொருளாதார ரீதியில் சிரமங்களை எதிர்நோக்கும் மாணவ மாணவிகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்க அதிமேதகு சனாதிபதி அவர்களினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தகுதியுடையவர்களைத் தெரிவு செய்வதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள மாணவ / மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்

  (1) விண்ணப்பதாரரின் குடும்பத்தின் மாதாந்த வருமானம் ரூபா.10,000/- இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

  (2) அரசாங்கப் பாடசாலையொன்றில் அல்லது கட்டணங்கள் அறவிடப்படாத தனியார் பாடசாலையொன்றில் கல்விகற்கும் ஒரு மாணவ / மாணவியாக இருத்தல் வேண்டும்.

  (3) விண்ணப்பதாரர் 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (சா/த) பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றி, 2021 ஆம் ஆண்டில் க.பொ.த (உ/த) வகுப்பில் கல்வி கற்பதற்கான பூரண தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

  (4) விண்ணப்பதாரர், 05 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் நிதியுதவி பெறாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

- கல்வி வலயம் ஒன்றுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை 100 ஆகும். தெரிவுசெய்யப்படும் புலமைப்பரிசில் பெறுநர்களுக்கு, க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றும்வரை மாதாந்தம் ரூபா.500/- வீதம் உயர்ந்தபட்சம் 24 மாத காலத்திற்கு புலமைப்பரிசில் நிதியுதவி வழங்கப்படும்.

- விண்ணப்பதாரர்கள், கீழ்க்காணப்படும் மாதிரியமைப்பைத் தழுவி தயாரித்துக்கொண்ட விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து, தாம் **க.பொ.த (சா / த) பரீட்சைக்காக கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்ட பாடசாலை அதிபரிடம் மாத்திரம் 2019.10.18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்க வேண்டும்.** பாடசாலையின் அதிபர், உரிய நடவடிக்கைகளின் பின்னர், அவ்விண்ணப்பப்படிவங்களை **2019.11.01** ஆந் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி பணிப்பாளரிடமும், ஏற்புடைய நேர்முகத் தேர்வுகளை நடாத்திய பின்னர் வலயக் கல்விப் பணிப்பாளர் தனது சிபாரிசுகளுடன்கூடிய விண்ணப்பப்படிவங்களை **2019.11.22** ஆந் திகதிக்கு முன்னர் மாகாண கல்வி பணிப்பாளரிடமும் ஒப்படைக்க வேண்டியிருப்பதால் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

- தெரிவு செய்யப்படும் அனைத்து புலமைப்பரிசில் பெறுநர்களின் இலங்கை வங்கிக் கிளைக் கணக்கிற்கு நேரடியாக தவணைப் பணம் வைப்பிலிடும் திறமுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

- இதுசம்பந்தமான முழு விபரங்களையும் சகல மாகாண சபைகளினதும் பிரதம செயலாளர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சனாதிபதி நிதியத்தின் www.presidentsfund.gov.lk என்ற இணைய தளத்தினூடாகவும் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

**உதய ஆர். செனெவிரத்ன**
சனாதிபதியின் செயலாளர்

சனாதிபதி அலுவலகம்
கொழும்பு-01

2019 செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி

**<u>மாதிரி விண்ணப்பப்படிவம்</u>**

**<u>2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த (சா /த) பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றி, அப்பரீட்சையில் சித்தியடைந்து, 2021 ஆம் ஆண்டில் க.பொ.த (உ/த) கல்விபயிலும் மாணவர்களுக்காக சனாதிபதி நிதியத்தின்மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில்கள்</u>**

(விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்குமுன் குறிப்பைப் பார்க்கவும்)

அலுவலக உபயோகத்திற்காக [ ]

மாகாணம்: ................................

மாவட்டம்: ..................................

கல்வி வலயம்: .............................

**01. விண்ணப்பதாரியின் பிரத்தியேக தகவல்கள்**

**01.01 விண்ணப்பதாரி பற்றிய விபரங்கள்**

1. முதலெழுத்துக்களுடனான பெயர்: ................................................
2. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்: ...........................
3. க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம்: ............
   பரீட்சை இல: ................
4. பரீட்சைக்குத் தோற்றிய முதல் தடவையிலேயே க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்து, உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்ளப்பட்டதா என்ற விபரம்: .........................
5. க.பொ.த (சா/த) பரீட்சைக்காக கல்விகற்ற பாடசாலை: ......................
6. க.பொ.த (உ/த) கற்கும் பாடசாலை: ......................
7. பிறந்த திகதி : ...........................
8. சொந்த முகவரி: .................
9. நீங்கள் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் நிதியுதவி பெறுபவரா? ....................

**01.02 குடும்ப விபரங்கள்**

| | | **புள்ளிகள்** |
|---|---|---|
| 1. | பெற்றோரில் தங்கிவாழும் 21 வயதுக்குக் குறைந்த குடும்பத்திலுள்ள சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை: ............... | |
| 2. | உங்கள் தாய், தந்தை இருவரும் உயிருடன் உள்ளனரா? ஆம்/ இல்லை | |
| 3. | உங்கள் தாய் அல்லது தந்தை மாத்திரம் உயிருடன் உள்ளாரா? ........ மாத்திரம் உள்ளார் | |
| 4. | பெற்றோர் அல்லாத பாதுகாவலர் ஒருவரின்கீழ் உள்ளாரா? ஆம் / இல்லை<br>(அவ்வாறாயின், சட்டமுறையான பாதுகாவலர்பற்றி உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) | |
| 5. | நீங்கள் உடலியல் குறைபாடு உள்ளவரா? ஆம்/இல்லை | |
| 6. | 5 ஆம் வினாவுக்கு பதில் “ஆம்“ எனில் அந்தக் குறைபாடு யாது? ........... | |

**பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள்** [ ]

*(ஆகக்கூடிய புள்ளிகள் 25 ஆகும்)*

**(02) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/த) பரீட்சையில் சித்திகள்**

| | **பாடம்** | **தரம்** | **புள்ளிகள்** |
|---|---|---|---|
| 1. | சமயம் | ………… | |
| 2. | மொழியும் இலக்கியமும் | ………… | |
| 3. | ஆங்கில மொழி | ………….. | |
| 4. | கணிதம் | …………. | |
| 5. | வரலாறு | ……… | |
| 6. | விஞ்ஞானம் | …………. | |
| 7. | முதலாம் பாடத் தொகுதிக்குரிய பாடம் (பாடம் ………………..) | ………….. | |
| 8. | இரண்டாம் பாடத் தொகுதிக்குரிய பாடம் (பாடம் ………………..) | …………. | |
| 9. | மூன்றாம் பாடத் தொகுதிக்குரிய பாடம் (பாடம் ………………..) | ………… | |
| | | **பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள்** | |

*(ஆகக்கூடிய புள்ளிகள் 50 ஆகும்)*

**03. விளையாட்டுக்கள்**

விளையாட்டுக்கள்:(உதாரணம் - கரப்பந்து /வலைப்பந்து /காற்பந்து /கூடைப்பந்து /கிரிக்கெற் / எல்லே/பூப்பந்து/கபடி/ரகர் /ஹொக்கி/மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் /சதுரங்கம் /கெரம் / ரென்னிஸ் /நீச்சல் / ஜிம்னாஸ்ரிக் /கராட்டி/ரேபிள் ரென்னிஸ்)

| **விளையாட்டு** | **தேசிய மட்டம்** | | **மாகாண மட்டம்** | | **வலய மட்டம்** | |
|---|---|---|---|---|---|---|
| | தலைமைத்துவம்/ பங்களிப்பு | | தலைமைத்துவம்/ பங்களிப்பு | | தலைமைத்துவம்/ பங்களிப்பு | |
| | 1 ஆம் இடம் | 2 அல்லது 3 ஆம் இடம் | 1 ஆம் இடம் | 2 அல்லது 3 ஆம் இடம் | 1 ஆம் இடம் | 2 அல்லது 3 ஆம் இடம் |
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |

**பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள்** ☐

*(ஆகக்கூடிய புள்ளிகள் 10 ஆகும்)*

**04. அழகியல் மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்**

(உதாரணம்- விவாதம் / பேச்சு/ அறிவாற்றல் / வாத்தியம் / பாடல் / சித்திரம் / நடனம் / சாரணர் / பயிலிளவல் / முதலுதவி / சுற்றாடல் முன்னோடி / ஏனைய/ பாடத் திறமைச் சித்திகள் )

| செயற்பாடுகள் | தேசிய மட்டம் | | மாகாண மட்டம் | | வலய மட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | தலைமைத்துவம்/ பங்களிப்பு | | தலைமைத்துவம்/ பங்களிப்பு | | தலைமைத்துவம்/ பங்களிப்பு | |
| | 1 ஆம் இடம் | 2 அல்லது 3 ஆம் இடம் | 1 ஆம் இடம் | 2 அல்லது 3 ஆம் இடம் | 1 ஆம் இடம் | 2 அல்லது 3 ஆம் இடம் |
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |

**பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள்**
***(ஆகக்கூடிய புள்ளிகள் 10 ஆகும்)***

**05. மாணவர் தலைமைத்துவம்**

1. பாடசாலை பிரதம மாணவர் தலைவர்
2. பாடசாலை உப பிரதம மாணவர் தலைவர்
3. மாணவர் தலைவர் (கனிட்ட/ சிரேட்ட)
4. தரத் தலைவர்
5. வகுப்புத் தலைவர்

***(ஆகக்கூடிய புள்ளிகள் 05 ஆகும்)***

**புள்ளிகளின் சாராம்சம்: குடும்பம்பற்றிய தகவல்கள்**

க.பொ.த (சா/த) பரீட்சை

இணைப் பாடவிதானம் - (விளையாட்டுக்கள்)

இணைப் பாடவிதானம் - (அழகியல் மற்றும் பிற)

மாணவர் தலைமைத்துவம்

**பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள்**

மேற்போந்த விடயங்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். தேவைப்படும் பட்சத்தில் குறித்த சான்றிதழ்களின் மூலச்சான்றிதழைச் சமர்ப்பிப்பதற்கும் நான் உடன்படுகின்றேன்.

....................................

திகதி: 2019 ................ ஆந் திகதி விண்ணப்பதாரரின் ஒப்பம்

..........................................................................................................

**<u>அதிபரின் சான்று</u>**

மேற்போந்த விடயங்கள் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகின்றேன்.

............................

**அதிபரின் ஒப்பம்**
**உத்தியோகபூர்வ இலச்சினை**

திகதி: …………….

**குறிப்பு:** (1) விண்ணப்பதாரர்கள், விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து, **தாம், க.பொ.த (சா/த) பரீட்சைக்காக கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்ட பாடசாலை அதிபரிடம் மாத்திரம் 2019.10.18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்க வேண்டும்.** புள்ளிகள் இடவேண்டிய கூடுகள் விண்ணப்பதாரரால் நிரப்பப்படலாகாது.

(2) உரிய துறைகள்பற்றிய புள்ளிவழங்கல், மாணவ மாணவிகளின் முன்னிலையில் பாடசாலை அதிபரால் மேற்கொள்ளப்படவேண்டும். புள்ளிகள் வழங்குவதுதொடர்பான விபரங்கள் பாடசாலை அதிபர்களுக்கு கிடைக்காத பட்சத்தில், அவற்றைப் பாடசாலை அதிபர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(3) பாடசாலை அதிபரினால் அவ்விண்ணப்பங்கள் **2019.11.01** ஆந் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளரிடமும் வலயக் கல்விப் பணிப்பாளர் குறித்த நேர்முகப் பரீட்சையை நடாத்தி தனது சிபாரிசுகளை **2019.11.22** ஆந் திகதிக்கு முன்னர் மாகாண கல்விப் பணிப்பாளரிடமும் ஒப்படைக்க வேண்டியிருப்பதால் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**குடும்பத்தின் மாதாந்த வருமானம் பற்றிய கூற்று**

(தாய்/ தந்தை /பாதுகாவலரால் நிரப்பப்படுதல் வேண்டும்)

நான் ……………………………………… தொழில்புரிகிறேன்/ தொழில்புரியவில்லை. எனது கணவர்/ மனைவி ……………………………….. நிறுவனத்தில் தொழில்புரிகிறார்/ தொழில்புரியவில்லை. எமது குடும்பத்தின் மாதாந்த வருமானம் ரூபா:……………………(எழுத்தில்) ஆகுமென வெளிப்படுத்துகின்றேன்.

………………..

**திகதி: ……………** **தாய்/ தந்தை /பாதுகாவலரின் ஒப்பம்**

**பெயர்: …………….**

மேற்போந்த வருமானம் பற்றிய விடயங்கள் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்.

…………………….

**கிராமசேவை உத்தியோகத்தரின் ஒப்பம்**

**திகதி: ……………..** **உத்தியோகபூர்வ இலச்சினை**

மேற்போந்த வருமானம் பற்றிய விடயங்கள் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்.

…………………….

**பிரதேச செயலாளர்**

**திகதி: ……………..** **உத்தியோகபூர்வ இலச்சினை**

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**

சமர்ப்பிக்கின்றேன்.

…………………………..

**பாடசாலை அதிபரின் ஒப்பம்**

**திகதி:...** **உத்தியோகபூர்வ இலச்சினை**

………………………………………………………………………………………………………..

அலுவலக உபயோகத்திற்காக:-

வலய நேர்முகப் பரீட்சைக் குழு உறுப்பினர்கள் பற்றிய தகவல்கள்-

| | பெயர் | பதவி | ஒப்பம் |
|---|---|---|---|
| 1. | ………………………………. | ……………………… | ……………………….. |
| 2. | ………………………………. | ……………………… | ……………………….. |
| 3. | ………………………………. | ……………………… | ……………………….. |